232

சிறுவர்களுக்கேற்ற

# நூதன முறை
# தமிழ் அப்பியாசங்கள்

## முதற் புத்தகம் (மூன்றாம் வகுப்பிற்கு)

சைதாப்பேட்டை டீசர்ஸ் காலேஜ்
கிண்டர்கார்டன் ஸுபரிண்டெண்டெண்ட்
**ஸி. கார்டன் பிரான்**
இயற்றியது

232
4-55

MADRAS

...க்ஸ்பர்ட் யூனிவர்ஸிடி ப்ரெஸ்

T3
031(3)
N55
148040.

விலை அணா 7

# NUTHANAMURAI TAMIL APPIYASANGAL

## MUTHAR PUTTAKAM

*(New Method Composition Exercises in Tamil–Book I)*

BY C. Gordon Fearon

## பொருள் அடக்கம்

1. ந, ண, ன அடங்கிய வார்த்தைகளை எடுத்தெழுதல் .... .... 1
2. ல, ள, ழ அடங்கிய வார்த்தைகளை எடுத்தெழுதல் .... .... 2
3. ர, ற அடங்கிய பதங்களை எடுத்தெழுதல் .... .... 3
4. ணா, னா, றா, ணொ, னொ, றொ, ணோ, னோ, றோ அடங்கிய பதங்களை எடுத்தெழுதல் .... .... 4
5. ஜ, ஸ, ஷ, ஹ, க்ஷ அடங்கிய வார்த்தைகளை எடுத்தெழுதல் .... 5
6. நிறம் .... .... .... .... 6
7. இவற்றின் உருசி என்ன? .... .... .... 7
8. எங்கு வசிக்கும்? .... .... .... .... 7
9. படத்திலுள்ள பொருள்களின் பெயர்களை எழுதல் .... .... 8
10. படத்திலுள்ள வாகனங்களின் பெயர்களை எழுதல் .... .... 9
11. எதற்கு உதவும்? .... .... .... .... 9
12. எது எதைத் தரும்? .... .... .... .... 10
13. யார் எதைச் செய்கிறான்? .... .... .... 10
14. கண்ட சாமான்கள் எந்தெந்தக் கடையில் விற்கப்படும்? .... .... 11
15. வாக்கியங்களைப் பார்த்து எழுதல் .... .... .... 12
16. வார்த்தைகளைச் சரியான வரிசையில் அமைத்து வாக்கியங்களை எழுதல் 12
17. கொடுக்கப்பட்ட வார்த்தைகளை உபயோகித்து வாக்கியங்களைப் பூர்த்தி செய்தல் .... .... .... .... 13
18. ஷை ஷை ஷை ஷை .... 13
19. கோடிட்ட இடங்களில் தகுந்த பதங்களை உபயோகித்தல் .... .... 14
20. வார்த்தைக்கு நடுவில் தகுந்த ஒற்று எழுத்து அமைத்தல் .... 14
21. படத்தைப் பார்த்து கோடிட்ட இடத்தில் சரியான பிராணியின் பெயரை எழுதல் .... .... .... .... 15
22. வார்த்தைகளைச் சரியான இடத்தில் உபயோகித்தல் .... .... 16
23. கோடிட்ட இடங்களில் தகுந்த பதங்களை உபயோகித்தல் .... 16
24. நற்பழக்கமும், துர்ப்பழக்கமும் .... .... .... 17
25. எது எதைவிடச் சிறியது? எது எதைக் காட்டிலும் பெரியது .... 18
26. படத்தைப் பார்த்துக் கேள்விகளுக்கு பதில் எழுதல் .... .... 19
27. இரண்டு வாக்கியங்களைச் சேர்த்து ஒரு வாக்கியமாக எழுதல் .... 20
28. கதையை ஒட்டின படசம்பந்தமான வாக்கியங்களும் கேள்விகளும் .... 21
29. கண்டதைப் படித்து கேள்விகளுக்குச் சரியான விடை எழுதல் .... 22
30. கதையை விளக்கும் சித்திரங்களைப்பற்றி சம்பாஷணை .... .... 23
31. படத்தைப்பற்றி வாக்கியம் எழுதல் .... .... .... 24
32. விடுகவிகள் .... .... .... .... 25

First edition, 1934
Reprinted, 1936, 1938, 1939, 1940, 1946, 1947, 1949
Second edition, 1951, 1953, 1955

முதல் பதிப்பு, 1934
மறு பதிப்புகள், 1936, 1938, 1939, 1940, 1946, 1947, 1949
இரண்டாம் பதிப்பு, 1951, 1953, 1955




பழக் கடை

TB 031(3) N55

# அப்பியாசம் 1

அடியிற்கண்ட வாக்கியங்களைப்படி. அந்த வாக்கியங்களி லிருந்து ந, ண, ன அடங்கிய வார்த்தைகளை மாத்திரம் எடுத்து எழுது.

| உ-ம் | ந | ண | ன |
|---|---|---|---|
| | நளன் | மணி | யானை |

1. யானை வரும் பின்னே மணி ஓசைவரு முன்னே.
2. நுண்ணிய கருமமும் எண்ணித் துணி.
3. பலநாள் திருடன் ஒருநாள் பிடிபடுவான்.
4. தென்னை மணற்பாங்கான இடத்தில் நன்ருய் வளரும்.
5. நாராயணன் சந்தனத்தைப் பன்னீரில் கலந்தான்.
6. குணவான் தன் குற்றம் உணர்வான்.
7. வெண்ணெயை உருக்கினுல் நெய்யாகும்.
8. கண் கண்டதைக் கையினுல் செய்ய முயலவேண்டும்.
9. நிடத நாட்டு வேந்தன் நளன்.
10. அவன் தமயந்தியை மணந்தான்.
11. நன்றி மறப்பது நன்று அன்று.
12. பிராமணர் பூணூல் தரிக்கின்றனர்.
13. நோன்பு என்பது கொன்று தின்னுமை.
14. நஞ்சை நிலத்தில் நெல் பயிராகும்.
15. பணமில்லாதவன் பிணம்.
16. கண்ணன் தின்னும் பண்டம் வெண்ணெய்.

# அப்பியாசம் 2

அடியிற்கண்ட வாக்கியங்களைப்படி. அவைகளிலிருந்து ல, ள, ழ அடங்கிய வார்த்தைகளை மாத்திரம் எடுத்து எழுது.

| ல | ள | ழ |
|---|---|---|
| பாலும் | புளிக்கும் | பழக |

1. பழகப் பழக பாலும் புளிக்கும்.
2. ஜலத்தில் தவளை விழுந்தது.
3. கூழானாலும் குளித்துக் குடி.
4. வெல்லம் வெள்ளத்தில் கரையும்.
5. அவள் அவல் தின்கிறாள்.
6. குழந்தை தவழ்கிறது.
7. புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது.
8. கீழோராயினும் தாழ உரை.
9. தோழனோடும் ஏழமை பேசேல்.
10. காலையிலும் மாலையிலும் வெளியே சென்று உலாவு.
11. வியாழன் வெள்ளிக்கிழமைக்கு முந்திய நாள்.
12. பெங்களூர் கோடைகாலத்தில் குளிர்ச்சியாக இருக்கும்.
13. மலைநாட்டில் மழை அதிகம்.
14. கடலின் அகலத்தையும் ஆழத்தையும் ஒருவராலும் அளவிட முடியாது.
15. வேளை தப்பாமல் வேலைகளைச் செய்.
16. குழந்தை அழுகிறது.
17. தபால்காரன் தோல் பையை தோளில் மாட்டிக்கொண்டிருக்கிறான்.
18. குடியானவன் காலைவேளையில் காளைமாடுகளை ஏர் உழக் கழனிக்கு ஓட்டுகிறான்.
19. புளியம்பழம் தின்றால் பல் கூசும்.
20. பலாப்பழத்தின்மீது ஏராளமான முட்கள் உள.

# அப்பியாசம் 3

பின்வரும் வாக்கியங்களில் ர, ற அடங்கிய பதங்களை எடுத்து எழுது.

| ர | ற |
|---|---|
| | |

1. விறகு கோணலானாலும் நெருப்புப் பற்றாதா ?
2. வருந்தினால் வராதது இல்லை.
3. மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்காதே.
4. புலிக்குப் பிறந்தது பூனையாய்ப் போகுமா ?
5. பிள்ளை பெற்றபின் அன்றோ பேரிடவேண்டும்.
6. பதறாத காரியம் சிதறாது.
7. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.
8. நொறுக்கித் தின்றவன் நூறு வயது இருப்பான்.
9. தேங்காய் நாரினால் கயிறு திரிக்கலாம்.
10. குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும்.
11. காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்.
12. கன்றைக் காணாமல் பசு கதறுகிறது.
13. அள்ளாது குறையாது, சொல்லாது பிறவாது.
14. காற்றில்லாமல் தூசி பறக்குமா ?
15. நின்று தின்றால் குன்றும் குறையும்.

# அப்பியாசம் 4

பின் வருவனவற்றைப் படித்து அவைகளிலிருந்து கீழே கொடுக்கப்பட்ட எழுத்துக்கள் அடங்கிய பதங்களை எடுத்து எழுது.

| | | |
|---|---|---|
| ணா | ணொ | ணோ |
| னா | னொ | னோ |
| றா | றொ | றோ |

1. காலணாவுக்கு ஒரு காற்றாடி.
2. கண்ணோய் ஒரு தொத்து வியாதி.
3. கன்னான் குடம் செய்கிறான்.
4. இன்றோடு எனக்குப் பதினொன்று வயது முடிவாகிறது.
5. வண்ணான் துணியை நன்றாய் வெளுக்கிறான்.
6. சீதையின் எதிரே மாய மானொன்று தோன்றிற்று.
7. ஆற்றோரத்தில் மரங்கள் நிறைந்திருக்கின்றன.
8. கற்றோருக்குச் சென்றவிடமெல்லாம் சிறப்பு.
9. ஏனோ ராமனுக்குப் பட்டம் என்றாள் கைகேயி.
10. நாங்கள் விளையாடப் போகிறோம்.

| | | |
|---|---|---|
| காணாமல் | வேறொன்று | நானொன்று |
| மண்ணொட்டன் | என்னோடு | உண்ணாமல் |
| என்னால் | அவனோடு | வேறொரு |
| சென்றான் | பெண்ணா? பிள்ளையா? | கூவினாள் |
| போகிறான் | அன்றோடு | கண்ணோய் |
| நானோ | தோன்றாமல் | வேண்டுமானால் |
| அவனோ | பிரம்பினால் | சொன்னால் |
| மற்றொன்று | பெற்றோர் | கோணாமல் |

# அப்பியாசம் 5

அடியிற்கண்ட வாக்கியங்களைப்படி. அவைகளிலிருந்து ஜ, ஸ, ஷ, ஹ, க்ஷ அடங்கிய வார்த்தைகளை மாத்திரம் எழுது.

| ஜ | ஸ | ஷ | ஹ | க்ஷ |
|---|---|---|---|---|
| | | | | |

மேலே காட்டியபடி தனித்தனி இடம் அமைத்துக்கொள்.

1. ஸர்ப்பம் விஷமுள்ளது.
2. ஸிம்ஹத்தோடு ஸ்நேகம் செய்யக்கூடாது.
3. ஸீதை ஸௌந்தர்யமுள்ளவள்.
4. ஜலம் ஜீவனுக்கு ஆதாரம்.
5. லக்ஷ்மி மஹா விஷ்ணுவின் மனைவி.
6. ஹனுமான் ஸீதையின் க்ஷேமத்தை விசாரித்தான்.
7. ரோஜா புஷ்பம் வாசனையுள்ளது.
8. பதினைந்து நாட்கள் கொண்டது ஒரு பக்ஷம்.
9. ஹைதர் மைசூரை ஆண்டான்.
10. ஸுந்தரம் ஹாரம் போட்டுக்கொண்டாள்.
11. நமது ராஜா ஆறும் ஜார்ஜ்.
12. பிரஹலாதன் ஹிரண்யகசிபுவின் பிள்ளை.
13. இமயமலை மிக உயரமானது.
14. மனிதனுக்கு பூஷணம் வித்தை.
15. ஜோதிடர் ஜாதகம் பார்த்தார்.
16. ஜூனுக்கு அடுத்த மாதம் ஜூலை.
17. பல ஜில்லாக்கள் கொண்டது ஒரு இராஜதானி.
18. ஸந்நியாசி காஷாயம் தரித்திருக்கிறார்.
19. ஒரு ஜதை வேஷ்டியும் ஒரு ஜோடி துண்டும் வாங்கிவா.

# அப்பியாசம் 6

நிறம்

| | |
|---|---|
| பச்சை | கறுப்பு |
| நீலம் | மஞ்சள் |
| வெள்ளை | சிவப்பு |

**உதாரணம்:** புல் **பச்சை** நிறம்

அப்பியாசம்

1. பல்
2. பால்
3. ஆகாயம்
4. இரத்தம்
5. கிளி
6. மசி
7. வெள்ளி
8. குங்குமம்
9. மஞ்சட்பொடி
10. சுண்ணும்பு
11. தலைமயிர்
12. இலை
13. காகிதம்
14. மீன் கொத்தி
15. சூர்ய காந்தி
16. காக்கை
17. வெல்லம்
18. யானை
19. வாழைப்பழம்
20. புல்
21. பஞ்சு
22. கத்தரிக்காய்
23. வேட்டி
24. தபால் பெட்டி
25. சந்திரன்
26. பலப்பம்
27. ரூபாய்
28. உழுந்து

## அப்பியாசம் 7

இவற்றின் உருசி என்ன?

| | | |
|---|---|---|
| தித்திப்பு | கரிப்பு | காரம் |
| புளிப்பு | துவர்ப்பு | கசப்பு |

**உதாரணம் :** சர்க்கரை **தித்திப்பு**

அப்பியாசம்

1. பாகற்காய்
2. அகத்திக்கீரை
3. புளி
4. மிளகு
5. எலுமிச்சம்பழம்
6. வாழைப்பூ
7. வேப்ப இலே
8. உப்பு
9. கரும்பு
10. பாக்கு
11. வெல்லம்
12. இஞ்சி
13. கற்கண்டு
14. மாங்காய்
15. இளநீர்
16. காராபூந்தி

## அப்பியாசம் 8

எங்கு வசிக்கும்?

| | | | |
|---|---|---|---|
| வீட்டில் | மரத்தில் | புற்றில் | நீரிலும் |
| காட்டில் | தண்ணீரில் | வளேயில் | நிலத்திலும் |

**உதாரணம் :** பசு **வீட்டில்** வசிக்கும்.

அப்பியாசம்

1. புலி
2. கிளி
3. பாம்பு
4. ஆடு
5. சிங்கம்
6. மீன்
7. கோழி
8. காகம்
9. கரடி
10. எலி
11. நண்டு
12. குருவி
13. பூனே
14. எறும்பு
15. கழுதை
16. குரங்கு
17. பெருச்சாளி
18. தவளே
19. ஆமை
20. கொசு

# அப்பியாசம் 9

இந்தப் படத்தைக் கவனித்துப் பார்த்து அதிலுள்ள பொருள்களின் பெயர்களை எல்லாம் விடாமல் எழுது.



# அப்பியாசம் 10



படத்தில் காணும் வாகனங்களின் பெயர்களை வரிசையாக எழுது.

1. நீ எந்தெந்த வண்டிகளில் பிரயாணம் செய்திருக்கிறாய் ?
2. உங்கள் வீட்டில் ஏதாவது ஒரு வண்டி இருக்கிறதா ?
3. வேகமாக ஓடும் வண்டிகள் யாவை ?
4. ரயில்வண்டி எதன்மீது ஓடுகிறது ?
5. ஜட்காவுக்கும் கோச்சுவண்டிக்கும் என்ன வித்தியாசம் ?

# அப்பியாசம் 11

எதற்கு உதவும் ?

**உதாரணம் :** மேஜை **எழுத** உதவும்.

அப்பியாசம்

1. விசிறி
2. கண்ணாடி
3. செருப்பு
4. ஆணி
5. சுத்தி
6. சீப்பு
7. உப்பு
8. புஸ்தகம்
9. பாய்
10. பணம்
11. ஏணி
12. தங்கம்
13. நெருப்புக்குச்சி
14. பூட்டு
15. குடை
16. வெண்கலப்பானை
17. விறகு
18. விளக்குமாறு
19. கயிறு
20. பந்து
21. மாம்பழம்
22. தேன்
23. தேங்காய் நார்
24. ஊசி நூல்

# அப்பியாசம் 12

## எது எதைத் தரும்?

பின்வரும் வார்த்தைகளை உபயோகித்து எழுது:

| | | |
|---|---|---|
| நிழல் | வெளிச்சம் | பால் |
| விஷம் | இன்பம் | பலம் |
| அறிவு | மழை | நோய் |
| ஜலம் | நன்மை | தீமை |

1. பசு
2. மேகம்
3. சூரியன்
4. மரம்
5. விளையாட்டு
6. கல்வி
7. சங்கீதம்
8. அசுத்தம்
9. கிணறு
10. பாம்பு
11. நல்லவர்களுடைய சிநேகம்
12. கெட்டவர்களுடைய சிநேகம்

**உதாரணம்: பசு பால்** தரும்.

# அப்பியாசம் 13

## யார் எதைச் செய்கிறுன்?

பின்வரும் வார்த்தைகளை உபயோகித்து எழுது:

| | | |
|---|---|---|
| பானைகள் | மரச்சாமான்கள் | துணி |
| சலவை | நகைகள் | இரும்புச் சங்கிலி |
| கொல்லத்துவேலை | பித்தளைப் பாத்திரங்கள் | க்ஷவரம் |
| தையல்வேலை | பயிர் | மீன் பிடிக்கிறுன் |

1. தச்சன் ——— செய்கிறுன்
2. தட்டான் ——— ———
3. கன்னுன் ——— ———
4. கருமான் ——— ———
5. வண்ணுன் ——— ———
6. கொத்தன் ——— ———
7. குயவன் ——— ———
8. சேணியன் ——— ———
9. தையற்காரன் ——— ———
10. அம்பட்டன் ——— ———
11. குடியானவன் ——— ———
12. செம்படவன் ——— ———

**உதாரணம்: தச்சன் மரச்சாமான்கள்** செய்கிறுன்.

# அப்பியாசம் 14

அடியிற்கண்ட சாமான்கள் எந்தெந்தக் கடையில் விற்கப் படும் அல்லது எங்கு கிடைக்கும் என்று யோசித்து எழுது:

**உதாரணம்:** சுக்கு மருந்துக் கடையில் விற்கப்படும் (கிடைக்கும்.)

### சாமான்கள்

1. காப்பிக்கொட்டை
2. துவரம்பருப்பு
3. சுக்கு
4. பொன் சங்கிலி
5. வெள்ளிக்கூஜா
6. பித்தளைக் குடம்
7. புடலங்காய்
8. நல்லெண்ணெய்
9. புடவை
10. நாற்காலி
11. ஆணி
12. லட்டு
13. கிச்சிலிப்பழம்
14. தமிழ் புஸ்தகம்
15. மல்லிகைப்பூ
16. கிருஷ்ண பொம்மை
17. டிக்கெட்
18. கார்டு

அடியிற்கண்ட கடைகளில் எது பொருத்தமாய் இருக்கும் என்று நீயே யோசித்துக் கொள்.

1. பக்ஷணக் கடை
2. ஜவுளிக் கடை
3. காய்கறிக் கடை
4. வாணியன் கடை
5. வெள்ளிக் கடை
6. நகைக் கடை
7. மருந்துக் கடை
8. பலசரக்குக் கடை
9. இரும்புக் கடை
10. மரக்கடை
11. புஸ்தகக் கடை
12. பித்தளைக் கடை (பாத்திரக் கடை)
13. நவதானியக் கடை
14. புஷ்பக் கடை
15. பொம்மைக் கடை
16. பழக் கடை
17. தபால் ஆபீஸ்
18. ரயில்வே ஸ்டேஷன்

# அப்பியாசம் 15

பின்வரும் வாக்கியங்களைப் பார்த்து எழுது :

1. கெடுவான் கேடு நினைப்பான்.
2. பல் தேய்த்துப் பால் குடி.
3. ஓதுவது ஒழியேல்.
4. தெருவில் தேர் வருகிறது.
5. சிறுவன் சீடை தின்கிறான்.
6. சொக்கலிங்கம் சோம்பேறி.
7. புனுகுப்பூனை காட்டில் வசிக்கும்.
8. முகத்தை மூடிக்கொண்டு தூங்காதே.
9. தந்தை தாய்ப் பேண்.
10. கூழானாலும் குளித்துக்குடி.
11. பாம்பு என்றால் படையும் அஞ்சும்.
12. நீர் நிலைகளில் பெரியது கடல்.
13. கடலின் அகலத்தையும் ஆழத்தையும் அளவிட ஒருவராலும் முடியாது.
14. ஏணியை எடு.
15. மேஜையின்மீது படிந்திருக்கும் தும்பு தூசிகளைத் துடை.

# அப்பியாசம் 16

பின்வரும் வாக்கியங்களில் பதங்கள் முன்னும் பின்னுமாக எழுதப்பட்டிருக்கின்றன. அவைகளைச் சரியாய் அமைத்து எழுது :

1. தினந்தோறும் தொழவேண்டும் நாம் கடவுளை.
2. கொடுக்கிறது பால் நமக்கு பசுமாடு.
3. நட பெற்றோர்களுக்கு உன் கீழ்ப்படிந்து நீ.
4. நேரிடும் சேர்ந்தால் கெடுதி கெட்டவர்களுடன்.
5. உண்டாகும் நல்லவர்களுடன் நன்மை சேர்ந்தால்.
6. உதிக்கிறான் காலையில் சூரியன் கிழக்கில்.
7. எடுத்தாகிலும் நன்றே பிச்சை படித்தல்.
8. வார்த்தாலும் விஷம் பாம்புக்கு அது பால் தரும்.
9. என்றும் நாம் பொய் இருக்கவேண்டும் பேசாமல்.
10. இல்லார்க்கு இல்லை குரு வித்தை.

## அப்பியாசம் 17

அடியிற்கண்ட வார்த்தைகளை உபயோகித்து வாக்கியங்களைப் பூர்த்திசெய்:

| | | |
|---|---|---|
| போகிறோம் | போகிறது | போகிறேன் |
| போகிறாய் | போகிறாள் | போகிறீர்கள் |
| போகின்றன | போகிறான் | போகிறீர் |

**உதாரணம் :**

நான் போகிறேன்
நாம் ______
நீ ______
நீர் ______
நீங்கள் ______
அவன் ______
அவள் ______
அது ______
அவை ______

## அப்பியாசம் 18

அடியிற்கண்ட வார்த்தைகளை உபயோகித்து வாக்கியங்களைப் பூர்த்திசெய்:

| | | |
|---|---|---|
| படித்தீர் | படித்தாய் | |
| படித்தோம் | படித்தேன் | படித்தீர்கள் |
| படித்தார்கள் | படித்தான் | படித்தாள் |

**உதாரணம் :**

நான் பாடம் படித்தேன்.
நாம் ___ ______
நீ ___ ______
அவன் ___ ______
அவள் ___ ______
நீர் ___ ______
நீங்கள் ___ ______
அவர்கள் ___ ______



4

## அப்பியாசம் 19

கோடிட்ட இடங்களில் தகுந்த பதங்களை வைத்து எழுது.

| | | | |
|---|---|---|---|
| 1. நான் | நாளைக்கு | பள்ளிக்கூடம் | வருவேன் |
| 2. நீ | நாளைக்கு | ______ | ______ |
| 3. அவன் | ______ | ______ | ______ |
| 4. அவள் | ______ | ______ | ______ |
| 5. நாங்கள் | ______ | ______ | ______ |
| 6. நீங்கள் | ______ | ______ | ______ |
| 7. அவர்கள் | ______ | ______ | ______ |
| 8. நீர் | ______ | ______ | ______ |

## அப்பியாசம் 20

வார்த்தைக்கு நடுவில் தகுந்த ஒற்று எழுத்து அமைத்து எழுது.

**உதாரணம் :**

பாடத்தை + படி = பாடத்தைப் படி.

அப்பியாசம்

கடைக்கு + போகிறான்
பாலை + குடி
மெதுவாக + பேசு
ஊருக்கு + சென்றான்
தங்க + காப்பு
கிணற்று + தவளை
பாம்பு + புற்று
இரும்பு + சங்கலி
தேய்த்து + குளி
வெள்ளி + தட்டு
அப்படி + செய்
பருத்தி + பஞ்சு
பூ + தொட்டி
பட்டு + புடவை
வெள்ளி + கூஜா
வைர + தோடு

# அப்பியாசம் 21



மேலேயுள்ள படங்களைப் பார். கோடிட்ட இடத்தில் சரியான பிராணியின் பெயரை எழுது.

**உதாரணம்** : கோழியைப்போல் அதிகாலையில் விழித்துக்கொள்.

1. ஏன்———போல் பதுங்குகிறாய்.
2. புலி———போல் இருக்கிறது.
3. ———போல் விஷமம் செய்யாதே.
4. பீமசேனன்———போல் பலமுள்ளவன்.
5. ———போல் பொறுமையாயிரு.
6. ———போல் உன் உறவினருடன் கூடிவாழ்.
7. ———போல் நடந்தால் ரயில் தவறிவிடும்.
8. ———போல் சொன்னபடி நட.

## யானை



கோடிட்ட இடங்களில் படத்தில் காணும் பொருளைப் போலுள்ள யானையின் உறுப்புகளின் பெயர்களை எழுது.

1. அதனுடைய———போல் இருக்கிறது.
2. அதனுடைய———போல் இருக்கிறது.
3. அதனுடைய———போல் இருக்கிறது.
4. அதனுடைய———போல் இருக்கிறது.

TB 031(3) NSS

## அப்பியாசம் 22

| |
|---|
| மேலே, கீழே. |
| முன்னே, பின்னே, நேரே. |
| குறுக்கே, நடுவில், மத்தியில், அடியில். |

இந்த வார்த்தைகளைச் சரியான இடத்தில் உபயோகப் படுத்து.

1. ரயில் வண்டியில்——தண்டவாளங்கள் இருக்கின்றன.
2. மத்தியானத்தில் சூரியன் தலைக்கு——இருக்கிறது.
3. வீட்டின்——கொல்லை இருக்கிறது.
4. வீட்டின்——தோட்டம் இருக்கிறது.
5. சாலையில்——ஒரு மரம் விழுந்து கிடந்தது.
6. மரத்தின்——பூ உதிர்ந்து கிடக்கிறது.
7. மரத்தின்——காய் காய்த்துத் தொங்குகிறது.
8. கிணற்றில்——ஒரு வாளி விழுந்து விட்டது.

## அப்பியாசம் 23

கோடிட்ட இடங்களில் தகுந்த பதங்களை உபயோகித்து எழுது. பின்வரும் பதங்களிலிருந்து தகுந்த பதங்களைப் பொறுக்கிக் கொள்.

ராமன், ராமனை, ராமனால், ராமனுடன், ராமனுக்கு, ராமனிடம், ராமனுடைய, ராமனைவிட, ராமா.

1. ——— தசரதருடைய பிள்ளை.
2. கைகேயி——— காட்டிற்குப் போகச் சொன்னாள்.
3. ———சீதையும் லக்ஷ்மணனும் காட்டிற்குச் சென்றனர்.
4. ——— வில்லுக்குக் கோதண்டம் என்று பெயர்.
5. விஸ்வாமித்திரர் ——— வில்வித்தை கற்றுக்கொடுத்தார்.
6. ———பலசாலி ஒருவரும் இல்லை.
7. அனுமான் ——— நட்புகொண்டான்.
8. ராவணனைக்கண்டு பயந்து சீதை ஆ ——— என்று அலறினாள்.
9. ராவணன்——— கொல்லப்பட்டான்.

# அப்பியாசம் 24

## நற்பழக்கமும், துர்ப்பழக்கமும்

அடியிலுள்ளதைக் கவனித்துப் படி; எவை நற்பழக்கம் எவை துர்ப்பழக்கம் என்று யோசி. பிறகு வரிசைப்பட எழுது.

1. நகம் கடிப்பது.
2. காலையில் எழுந்திருப்பது.
3. பல் தேய்ப்பது.
4. பாக்குத் தின்பது.
5. குழந்தையை அடிப்பது.
6. தாயாருடன் சண்டை போடுவது.
7. அப்பா சொற்படி கேட்பது.
8. சாயங்காலம் தூங்குவது.
9. நன்றாய்க் குளிப்பது.
10. நாயின்மேல் கல் எறிவது.
11. துணியைச் சுத்தமாய் வைப்பது.
12. புஸ்தகத்தைப் படிப்பது.
13. கெட்ட வார்த்தைகளைப் பேசுவது.
14. கடவுளை வணங்குவது.
15. காகிதத்தைக் கிழிப்பது.
16. மழையில் நனைவது.

| நற்பழக்கம் | துர்ப்பழக்கம் |
|---|---|
| 1. | 1. |
| 2. | 2. |
| 3. | 3. |

# அப்பியாசம் 25

எது எதைவிடச் சிறியது?
எது எதைக்காட்டிலும் பெரியது?

**உதாரணம்:**

பூனை புலியைவிடச் சிறியது.
புலி பூனையைக்காட்டிலும் பெரியது,

| | | |
|---|---|---|
| பூனை | .... .... .... | புலி |
| கடல் | .... .... .... | கிணறு |
| ஆயிரம் | .... .... .... | தொள்ளாயிரம் |
| பட்டினம் | ... .... | கிராமம் |
| செடி | .... .... .... | மரம் |
| மேஜை | .... .... .... | நாற்காலி |
| வீடு | .... .... .... | குடிசை |
| கோச்சுவண்டி | .... .... | ஜட்காவண்டி |
| செம்பு | .... .... .... | தவலை |
| ஆடு | .... .... .... | மாடு |
| பந்து | .... .... .... | கோலி |
| குன்று | .... .... .... | மலை |
| தேங்காய் | .... .... | மாங்காய் |
| எலி | .... .... .... | பெருச்சாளி |
| ஏரி | .... .... .... | குளம் |

# அப்பியாசம் 26

**குறிப்பு:** இந்தப் புஸ்தகத்தின் ஆரம்பத்திலுள்ள பழக் கடையின் படத்தைப் பாருங்கள். அதைப்பார்த்து அடியிற் கண்ட கேள்விகளுக்குப் பதில் எழுதவும்.

1. இவை எத்தனை கடைகள்?
2. இங்கு எத்தனை கடைகள் இருக்கின்றன?
3. எத்தனை பேர் பழங்கள் வாங்க வந்திருக்கிறார்கள்?
4. கடையில் என்னென்ன பழங்கள் இருக்கின்றன?
5. ஒரு கடைக்காரன் தலையில் என்ன கட்டிக்கொண்டிருக்கிறான்?
6. ஒரு ஸ்திரீ பழத்தை முகர்ந்து பார்க்கிறாள். ஏன்?
7. அடியிற்காணும் வார்த்தைகளிலிருந்து சரியான வார்த்தையைப் பொறுக்கி பின்வரும் வாக்கியங்களில் அமை.

   வாழைப்பழம்——— இருக்கின்றன.

   திராட்சைப்பழம்——— இருக்கின்றன.

   மாம்பழம்——— இருக்கின்றன.

**வார்த்தைகள்:**

(1) குலை குலையாக (2) கொத்துக் கொத்தாக (3) சீப்பு சீப்பாக (4) குவியல் குவியலாக

8. தித்திப்பான பழங்கள் எவை?

   புளிப்பான பழங்கள் எவை?
9. எந்தமாதிரி பழங்களை நாம் சாப்பிடவேண்டும்?
10. உனக்கு எந்தப் பழம் நிரம்பப் பிடிக்கும்?
11. பசுமை நிறமுள்ள பழங்கள் எவை?

    மஞ்சள் நிறமுள்ள பழங்கள் எவை?

    சிவப்பு நிறமுள்ள பழங்கள் எவை?
12. நீண்ட உருவமுள்ள பழங்கள் எவை?

    உருண்டை வடிவமுள்ள பழங்கள் எவை?

    சொர சொரப்புத் தோல் உள்ள பழங்கள் எவை?

# அப்பியாசம் 27

இரண்டு வாக்கியங்களைச் சேர்த்து ஒரேவாக்கியமாய் எழுது.

**உதாரணம் :**

ராமன் பாடம் படிக்கிறான்.
கிருஷ்ணன் பாடம் படிக்கிறான்.

ராமனும் கிருஷ்ணனும் பாடம் படிக்கிறார்கள்.

1. சீதை பாட்டுப் பாடுகிறாள்.
   லக்ஷ்மி பாட்டுப் பாடுகிறாள்.
2. கோபாலன் பந்து ஆடுகிறான்.
   கோவிந்தன் பந்து ஆடுகிறான்.
3. மாமா இன்று ஊருக்கு வந்தார்.
   அத்தை இன்று ஊருக்கு வந்தாள்.
4. அப்பா எனக்கு சட்டை வாங்கித் தந்தார்.
   அப்பா எனக்கு குல்லாய் வாங்கித் தந்தார்.
5. நான் ஐந்துரூபாய் கொடுத்து ஒரு நாற்காலி வாங்கினேன்.
   நான் ஏழு ரூபாய் கொடுத்து ஒரு மேஜை வாங்கினேன்.
6. குடை வெயிலைத் தடுக்கும்,
   குடை மழையைத் தடுக்கும்.
7. சூரியன் நமக்கு உஷ்ணத்தைக் கொடுக்கிறது.
   சூரியன் நமக்கு வெளிச்சத்தைக் கொடுக்கிறது.
8. ரோஜாப்பூ அழகானது.
   ரோஜாப்பூ வாசனையுள்ளது.
9. அவர் வயதில் பெரியவர்.
   அவர் அறிவில் பெரியவர்.
10. நம்மைப் படைத்தவர் கடவுள்.
    நம்மைக் காப்பவர் கடவுள்.

# அப்பியாசம் 28



கதையை ஒட்டின படசம்பந்தமான வாக்கியங்களும் கேள்விகளும்.

குறிப்பு :—[இந்த அப்பியாசத்தில் சம்பாஷணை, மனத்தினுள் படித்தல், படித்த விஷயத்தை மனத்தில் வைத்துக் கேட்ட கேள்விகளுக்குப் பதில் அளித்தல் இவை பொருந்தி யிருக்கின்றன.]

**வாக்கியங்கள் :**

### எங்கள் வேலை அது அல்ல

1. ஒரு நாள் அரசனது வீட்டில் ஒரு கன்றுக்குட்டி காணமல் போயிற்று.
2. இராஜா **பல்லக்குத் தூக்கிகளைக்** கூப்பிட்டு கன்றுக் குட்டியைத் தேடிவரச் சொன்னர்.
3. பல்லக்குத் தூக்கிகள் இராஜாவிடம் 'அது எங்களது வேலை அல்ல' என்றார்கள்.
4. இராஜா பல்லக்கில் உட்கார்ந்துகொண்டு பல்லக்கைத் தூக்கிச் செல்லும்படி உத்தரவிட்டார்.
5. அவர்களை நோக்கி, **'மேட்டில் ஏறு, பள்ளத்தில் இறங்கு, கல்லில் நட, முள்ளில் போ'** என்றார்.
6. பல்லக்குத் தூக்கிகள் மிகவும் கஷ்டப்பட்டார்கள்.
7. கடைசியில் அவர்கள் 'நாங்களே கன்றுக்குட்டியைத் தேடி வருகிறோம்' என்று சொன்னர்கள்.

### கேள்விகள்

1. பல்லக்கில் யார் உட்கார்ந்திருக்கிறார் ?
2. எத்தனை பேர் பல்லக்குத் தூக்குகிறார்கள் ?
3. ஒருநாள் இராஜா எதைத் தேடச் சொன்னர் ?
4. அவர்கள் என்ன பதில் சொன்னர்கள் ?
5. அரசன் பல்லக்குத் தூக்கிகளை எங்கெங்கே நடக்கச் செய்தார் ?
6. கடைசியில் பல்லக்குத் தூக்கிகள் என்ன சொன்னர்கள் ?

# அப்பியாசம் 29

அடியிற் கண்டதைப் படித்து கேள்விக்குச் சரியான விடையை எழுது.

ஒரு காட்டில் ஒரு சிங்கம் இருந்தது. அந்தக் காட்டிலேயே ஒரு விறகு வெட்டி இருந்தான். அவனுக்கு அழகான ஒரு பெண் உண்டு. அந்தப் பெண்ணை சிங்கம் விவாகம் செய்துகொள்ள ஆசைப்பட்டது. சிங்கம் பெண்ணின் தகப்பனாரிடம் சென்று பெண்ணைத் தனக்குக் கொடுக்கும்படி கேட்டது.

விறகு வெட்டி திகைத்து 'என்னுடைய பெண் உன்னைப் பார்த்துப் பயப்படுவாள். அதனால் நீ உன் பற்களையும் நகங்களையும் பிடுங்கிவிட்டு வந்தால் அப்போது என் பெண்ணைத் தருவேன்' என்றான்.

சிங்கம் உடனே தன் நகங்களையும் பற்களையும் பிடுங்கிவிட்டது. விறகு வெட்டி இனிமேல் தன்னைச் சிங்கம் ஒன்றும் செய்யாது என்று எண்ணி அதைக் கொன்றுவிட்டான்.

### கேள்விகள்

1. சிங்கம் யாரிடம் போய் பெண் கேட்டது ?
2. அது என்ன செய்யவேண்டுமென்று ஆசைப்பட்டது ?
3. விறகு வெட்டி என்ன பதில் சொன்னான் ?
4. விறகு வெட்டி பெண்ணைக் கொடுக்கமாட்டேன் என்றால் சிங்கம் அவனை என்ன செய்திருக்கும் ?
5. சிங்கம் எப்படி இறந்தது ?

| | |
|---|---|
| சிங்கம் பற்களைப் | கலியாணம் செய்துகொள்ள ஆசைப்பட்டது. |
| பெண் | சிங்கத்தைக் கொன்றான். |
| சிங்கம் | பிடுங்கிவிட்டது. |
| விறகு வெட்டி | அழகாக இருந்தாள். |

மேலே கொடுக்கப்பட்ட பதங்களில் எவை பொருத்தமுள்ளவை என்று யோசித்து வாக்கியங்களாக எழுது.

உ-ம். சிங்கம் பற்களைப் பிடுங்கிவிட்டது.

# அப்பியாசம் 30



### கதையை விளக்கும் சித்திரங்கள்

உபாத்தியாயர் இப்படங்களைப்பற்றி குழந்தைகளுடன் சம்பாஷிக்கலாம்.

படம் 1. எத்தனைபேர் சாலையில் நடந்து செல்லுகிறார்கள்?

2. இப்பொழுது அவர்கள் எங்கு வந்திருக்கிறார்கள்?

3. அவர்கள் எதிரில் என்ன மிருகம் வந்துகொண்டிருக்கிறது.

4. கரடியைக் கண்டதும் இருவரும் என்ன செய்கிறார்கள்?

5. படத்தில் ஒருவன் படுத்து இருக்கிறான். மற்றவன் எங்கு உட்கார்ந்திருக்கிறான்?

6. இருவரும் என்ன பேசிக்கொள்ளுகிறார்கள்?

# அப்பியாசம் 31

ஒவ்வொரு படத்தைப்பற்றியும் ஒவ்வொரு வாக்கியம் எழுது.

**உதாரணம் :** *1.* குயவன் வீட்டுவாசலில் களிமண் கொட்டிக் கிடக்கிறது.



# அப்பியாசம் 32

## விடுகவிகள்



மேலேயுள்ள படங்களைக் கவனி. கீழேயுள்ள விடுகவிகளைப் படி. அதற்குச் சரியான விடையை நேரே எழுது.

1. மஞ்சள் மஞ்சளோர் என்றிருக்கும் புஷ்பம்
மாதர் தலையில் அணியும் புஷ்பம்
அடுக்கு அடுக்குப்போன்ற இதழ்கள்
அழகிய மெல்லிய இதழ்கள்
அந்தப் புஷ்பம் என்ன புஷ்பம்?

2. கறுப்புச் சட்டைக்காரன் காவலுக்குக் கெட்டிக்காரன்.
அவன் யார்?

3. தொந்தி பெருத்தவன், குட்டைக்காலன்
நீண்ட மூக்கன், பூமியைத் தோண்டுவான்
தோட்டி பின் செல்வான்
தோட்டி வேலை செய்வான்
பெருத்த சம்சாரம் பின் தொடர்ந்தே போகும். அவன் யார்?

# அப்பியாசம் 32 (தொடர்ச்சி)

4. செடியோ முட்செடி
பூவோ கமகம என்றிருக்கும்
இராணி முடியில் அணியும் புஷ்பம்
அத்தர் எடுக்கும் புஷ்பம்
பூவுண்டு காயில்லை. அது என்ன புஷ்பம்?

5. என் அப்பன் சொறியன்
ஆத்தாள் சடைச்சி
அண்ணன் விழியன்
நான் சக்கரைக் குட்டி. நான் யார்?

6. சின்னஞ்சிறு பாத்திரமாம்
பாப்பாவுக்கு ஏற்ற பாத்திரமாம்
வெள்ளி வெங்கலப் பாத்திரமாம்
வாயும் மூக்கும் உள்ள பாத்திரமாம்
பாலன் கையில் பிடித்துப் பால் உறிஞ்சும் பாத்திரமாம்.
அது என்ன?

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அ | ஆ | இ | ஈ | உ | | எ | ஏ | ஐ | ஒ | ஓ | ஔ | ஃ |
| க | கா | கி | கீ | கு | | கெ | கே | கை | கொ | கோ | கௌ | க் |
| ங | ஙா | ஙி | ஙீ | ஙு | ஙூ | ஙெ | ஙே | ஙை | ஙொ | ஙோ | ஙௌ | ங் |
| ச | சா | சி | சீ | சு | சூ | செ | சே | சை | சொ | சோ | சௌ | ச் |
| ஞ | ஞா | ஞி | ஞீ | ஞு | ஞூ | ஞெ | ஞே | ஞை | ஞொ | ஞோ | ஞௌ | ஞ் |
| ட | டா | டி | டீ | டு | டூ | டெ | டே | டை | டொ | டோ | டௌ | ட் |
| ண | ணா | ணி | ணீ | ணு | ணூ | ணெ | ணே | ணை | ணொ | ணோ | ணௌ | ண் |
| த | தா | தி | தீ | து | தூ | தெ | தே | தை | தொ | தோ | தௌ | த் |
| ந | நா | நி | நீ | நு | நூ | நெ | நே | நை | நொ | நோ | நௌ | ந் |
| ப | பா | பி | பீ | பு | பூ | பெ | பே | பை | பொ | போ | பௌ | ப் |
| ம | மா | மி | மீ | மு | மூ | மெ | மே | மை | மொ | மோ | மௌ | ம் |
| ய | யா | யி | யீ | யு | யூ | யெ | யே | யை | யொ | யோ | யௌ | ய் |
| ர | ரா | ரி | ரீ | ரு | ரூ | ரெ | ரே | ரை | ரொ | ரோ | ரௌ | ர் |
| ல | லா | லி | லீ | லு | லூ | லெ | லே | லை | லொ | லோ | லௌ | ல் |
| வ | வா | வி | வீ | வு | வூ | வெ | வே | வை | வொ | வோ | வௌ | வ் |
| ழ | ழா | ழி | ழீ | ழு | ழூ | ழெ | ழே | ழை | ழொ | ழோ | ழௌ | ழ் |
| ள | ளா | ளி | ளீ | ளு | ளூ | ளெ | ளே | ளை | ளொ | ளோ | ளௌ | ள் |
| ற | றா | றி | றீ | று | றூ | றெ | றே | றை | றொ | றோ | றௌ | ற் |
| ன | னா | னி | னீ | னு | னூ | னெ | னே | னை | னொ | னோ | னௌ | ன் |
| ஸ | ஸா | ஸி | ஸீ | ஸு | ஸூ | ஸெ | ஸே | ஸை | ஸொ | ஸோ | ஸௌ | ஸ் |
| ஷ | ஷா | ஷி | ஷீ | ஷு | ஷூ | ஷெ | ஷே | ஷை | ஷொ | ஷோ | ஷௌ | ஷ் |
| ஜ | ஜா | ஜி | ஜீ | ஜு | ஜூ | ஜெ | ஜே | ஜை | ஜொ | ஜோ | ஜௌ | ஜ் |
| க்ஷ | க்ஷா | க்ஷி | க்ஷீ | க்ஷு | க்ஷூ | க்ஷெ | க்ஷே | க்ஷை | க்ஷொ | க்ஷோ | க்ஷௌ | க்ஷ் |
| ஹ | ஹா | ஹி | ஹீ | ஹு | ஹூ | ஹெ | ஹே | ஹை | ஹொ | ஹோ | ஹௌ | ஹ் |



TB 031(3) NSS
148040
600 008.

எனது அன்புள்ள கு[torn]

இந்தப் புத்தகத்[torn] ளுக்குப் பிரியமான சில வேடிக்கைப் பாடங்கள் இருக்கின்றன. நீங்கள் எழுதும்பொழுது உங்களது எழுத்துக்களைச் சுத்தமாகவும் தெளிவாகவும் நிறுத்தியும் எழுதவேண்டும். உங்களது எழுத்துக்கள் இருபத்தேழாவது பக்கத்தில் காட்டிய அச்சு எழுத்துக்கள் போல் இருக்க வேண்டும். தமிழ் பாஷையிலுள்ள எல்லா எழுத்துக்களையும் எழுத சமயம் நேராது. ஆயினும் நீங்கள் எழுதுகிற எழுத்துக்கள் வெகு நன்றாக இருக்கவேண்டும். கையெழுத்து நன்றாக இருக்கிறதைப் பார்த்து எல்லோரும் சந்தோஷப்படுவார்கள்.

இப்படிக்கு,
உங்களது பிரியமுள்ள
ஸி. கார்டன் பீரான்

---

# முகவுரை

தற்காலத்தில் ஆரம்பப் பாடசாலைகளில் படிக்கும் குழந்தைகளுக்காகக் கணக்கற்ற வாசக பாட புத்தகங்கள் வெளிவந்துள்ளன. ஆனால் இவ்வரிசையிலுள்ள புத்தகங்களோ வாசக பாட புத்தகங்கள் ஆகமாட்டா. இப்புத்தகங்களின் நோக்கம் வேறு. குழந்தைகள் வாசக பாட புத்தகங்களைப் படிக்குங்கால் பாஷா சம்பந்தமான பற்பல விஷயங்களைக் கற்றுக் கொள்ளுகிறார்கள். அவ்வாறு கற்றுக் கொண்ட விஷயங்களை மனததில் வைக்கவும், அவற்றை அப்பியாசம் செய்யவும் சில ஆசிரியர்கள் போதுமான பயிற்சி கொடுப்பதில்லை. ஒரு வகுப்பில் சேர்ந்துள்ள பல குழந்தைகட்கும் ஏககாலத்தில் ஒரு உபாத்தியாயர் பாடம் சொல்லிக் கொடுக்கும்போது 'ஒவ்வொரு குழந்தையும் அதைச் சரியாய்க் கற்று வருகிறதா? கற்றுக் கொண்டதை ஞாபகம் வைத்துக் கொண்டிருக்கிறதா?' என்று கண்டறிவது அசாத்தியமான காரியமே. எனினும், ஒவ்வொரு குழந்தையும் நன்றாய் அபிவிருத்தியடையும்படி பாடுபட முயலுவது உபாத்தியாயர்களின் கடமையாகும். அதற்கிணங்க, இப்பொழுது 'தனித்தனியே அப்பியாசம் கொடுத்துப் பழக்கும் முறை' என்பது நூதனமாகப் பலவிடங்களில் பரவிவருகிறது. இம் முறைப்படி ஒரு குழந்தை ஒரு அப்பியாசத்தைச் செய்ய தனக்கு வேண்டிய நேரத்தை எடுத்துக் கொள்ளலாம். சீக்கிரம் முடிக்கக்கூடிய ஒரு புத்திசாலிக் குழந்தை ஒன்றை முடித்துவிட்டு அடுத்த அப்பியாசத்தைச் செய்யலாம். இவ்வாறு அவர்கள் செய்வதனால் உபாத்தியாயரின் வேலை ஒரு போதும் குறைவாகாது. இம்முறைப்படி பாடங்களை நடத்துவதில் உபாத்தியாயர், குழந்தைகள் இவர்களுக்குப் பூரண பிரயோஜனம் உண்டு. தமது வகுப்புக் குழந்தைகள் ஒவ்வொருவரும் 'என்ன தப்பு செய்கிறார்கள்? எதை அறியாமலிருக்கிறார்கள்? எந்த விஷயத்தில் தாம் அதிக கவனம் செலுத்தவேண்டும்?' என்று கண்டறிந்து கற்பிப்பதில் உபாத்தியாயர் கண்ணுங்கருத்துமாக இருக்கவேண்டும். அது அவர்களால் இயலும் காரியமே. இவற்றைக் கவனித்து உபாத்தியாயர்கள் குழந்தைகளுக்குத் தக்கவாறு உதவி செய்து, குழந்தைகளும் பாஷையில் அதிகத் தேர்ச்சியடையும்படி செய்யவேண்டும்.

[பின்பக்கம் பார்க்க]

பாஷையைக் கற்றுக் கொடுக்கும் விஷயத்தி [illegible] என்பதில் அ [illegible] கவனம் செலுத்தி வருகிறோம்; எழுதப் பழகுவதில் [illegible] ப்பியாசம் கொடுப்பதில்லை. பார்த்தெழுதல், சொல்லுவதெழுதல், வியாச [illegible] றவாறு எழுதப் பழக்கும் அப்பியாசங்கள் பல உள்ளன. ஆனால் பிற்கூறிய [illegible] வரைதல் முறைக்கு முன், மற்றும் சில அஸ்திவாரப் பயிற்சிகளை அப்யசிப்பது அவசியமாகும். ஏற்றபடி பதங்களைப் பொறுக்குதல், சொற்களைச் சரியான சந்தர்ப்பங்களில் அமைத்துக் காட்டுதல், அவற்றைச் சரியானபடி எழுதுதல், வாக்கியத்தைப் பிசகின்றி எழுதுதல், கருத்துக்களை எளிதாக விளங்கச் செய்து அவற்றைத் தெளிவாக எழுதப் பழக்குதல் இவ்வாறு படிப்படியாக பாஷையில் தேர்ச்சி உண்டுபண்ணுவதே குழந்தைகளுக்கு ஏற்ற முறையாகும்.

இம்முறைகளை அனுசரித்தே, எமது பள்ளிக்கூடத்தில் 3, 4, 5-வது வகுப்புகளுக்கு இங்கு காட்டியுள்ள பயிற்சிகளைச் சென்ற மூன்று வருஷங்களாக அப்பியாசம் செய்து பார்த்தோம். குழைந்தைகள் எப்பிழைகள் செய்து வருகிறார்கள் என்று கண்டறிந்ததில் எழுத்துப்பிழை, வார்த்தைப் பிழை இவைகளே பெரும்பாலும் காணப்பட்டன. இவைகளை நீக்கத்தக்கவாறு சில அப்பியாசங்களைச் சேர்த்திருக்கிறோம். மற்றும் சரியானபடி ஒரு வாக்கியத்தை அமைக்கத் தக்கவாறும் பல பயிற்சிகள் எடுத்து கொள்ளப்பட்டிருக்கின்றன. மேலும் ஆரம்பப் பாடசாலையை விட்டுச் செல்லும் குழந்தை படித்தல், படங்களைப் பார்த்து விஷயங்களை அறிதல், விடுகவிகளைப் படித்து அறிந்து கொள்ளுதல், தினசரிப் பத்திரிகை படித்தல் முதலியவைகள் அவசியமெனக் கண்டு அவைகளில், சில அப்பியாசங்களை வகுப்பிற்கு ஏற்றவாறு சேர்த்திருக்கிறோம்.

இம்மாதிரி பயிற்சிகளில் மற்றும் பல பள்ளிக்கூடக் குழந்தைகள் பழகி நன்மையை, அடையவேண்டுமென்று எண்ணியும், இப்பயிற்சிகள் அடங்கிய புத்தகம் இல்லாமையைக் கண்டும், இவைகளைப் புத்தமாக வெளியிட முன்வந்தோம். எல்லா ஆரம்பப் பாடசாலை உபாத்தியாயர்களுக்கும் குழந்தைகளுக்கும் இப்புத்தகங்கள் பெரிதும் பயனளிக்குமென்று முற்றும் நம்புகிறோம்.

இந்த அப்பியாசங்களைத் தயார் செய்வதில் எனக்கு உதவிசெய்த டீசர்ஸ் காலேஜ் கிண்டர்கார்டன் செக்ஷன் உபாத்தியாயர்களுக்கு எனது நன்றியைத் தெரிவிக்கின்றேன். மேலும், முக்கியமாக, இந்த அப்பியாசங்களைத் தயார் செய்வதன்றியில் இவற்றைப் புஸ்தக ரூபமாக எழுதுவதில் உதவிசெய்த ஸ்ரீமான் எஸ். ஜகந்நாதன் அவர்களுக்கு என் வந்தனங்கள் உரித்தானவையாகும்.

ஸி. கார்டன் பீரான்

Printed in India at The Liberty Press, G.T. Madras, 1
and Published by Geoffrey Cumberlege, Oxford University Press, Madras, 2